**ஊர்காவற்றுறை பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊர்காவற்றுறை பிரதேசசபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கும் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக 2015 ம் ஆண்டு செலுத்த வேண்டியுள்ள ரூபா 3,686,170 இற்கு ஓய்வூதிய ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் திரண்டநிதி கணக்குகளில் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி அலுவலர்களுடைய ஓய்வூதிங்களும் இளைப்பாற்று நயங்களுக்குமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 96,946 வருமான செலவுக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காமையினால் செலவினம் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(இ) நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 28,167,600 பெறுமதியுடைய 16 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பெறுமதிகளை கணக்குக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) நன்கொடையாக வழங்கப்பட்ட லொறிபவுசர் உரிமை மாற்றம் செய்யப் பட்டிருக்காததுடன் பெறுமதியும் மதிப்பிடப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(உ) ரூபா 885,000 பெறுமதியில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடம் கணக்குக்குக் கொண்டு வரப்பட்டிருக்காமையினால் காணி கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

சபையினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு, காணி கட்டிடத்தின் பதிவேடு, இழப்புக்கள் சேதங்கள் பதிவேடு, காணி விற்பனவு வரி பதிவேடு, வீதி விளக்கு பதிவேடு, வியாபார வரி பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் | |
| இல.148 (1) | வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு பிரதேச சபைக்கு அதிகார மளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வாகனங்கள் விலங்குகள் மீதான வரியானது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேசசபைகள் (நிதி நிருவாக) விதிகள் | |
| அத்தியாயம் II விதி 4 | ஆதனவரி மதிப்பீடு மற்றும் ஆதனவரி அறவீடு சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் | |
| நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 10,363,038 ஆக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 3,855,756 ஆக இருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 6,507,282 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறியமிகை ரூபா 4,071,099 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறியமிகை ரூபா 1,022,865 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 3,048,234 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படுமூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படுமூலதனம் ரூபா 36,613,448 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படுமூலதனம் ரூபா 30,909,742 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படுமூலதனம் ரூபா 5,703,706 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான நிர்வாகம்

### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2016 | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** 000 | **ரூபா** 000 | **ரூபா** 000 |
| குத்தகை வாடகைகள் | 2,302 | 3,014 | 8 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 347 | 345 | - |
| ஏனைய வருமானங்கள் | 43,158 | 38,498 | 6,143 |
| **மொத்தம்** | **45,807** | **41,856** | **6,151** |

### 2.4.2 ஆதனவரி

சபையினால் ஆதனவரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 முத்திரைக் கட்டணம்

2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 4,045,690 முத்திரைக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 ஏனைய வருமானம்

சபையினால் 16 மயானங்களிற்கு மயானவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 82 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த போதும் 61 பதவியினரே கடமையாற்றுகின்றமையால் 21 பதவியினர் பற்றாக்குறையாகவும் காணப்படுகின்றது.

(ஆ) ரூபா 885,000 பெறுமதியான கிராமிய சந்தை பொதுமக்களால் பயன்படுத்தப்படாமலுள்ளது

(இ) சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு வருடமொன்றிற்கு குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் மட்டுமே நடைபெற்றுள்ளது.

### 3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

தேவரதம் படகு 03 வருட காலமாகப் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

### 3.3 செயற்திட்டத்தின் தாமதம்

ரூபா 195,135 பெறுமதியான ஒரு செயல்திட்டமானது பூர்த்தி செய்யப்படாதுள்ளது.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் மீள்சுழற்சிக்குட்படுத்தாது தீ மூட்டி எரிக்கப்படுகின்றது.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

#### செலவினக் கட்டமைப்பு

பாதீட்டுச்செலவினங்களுக்கும் உண்மைச்செலவினங்களுக்கும் இடையே ரூபா 110 தொடக்கம் ரூபா 9,846,152 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.